செ.வெ.எண்: 37 நாள்: 17.09.2016

# புதுக்கோட்டை மாவட்டத்தில் ரூ.65 இலட்சம் மதிப்பீட்டில் பேருந்து நிலையம் புதுப்பித்தல் பணிக்கான பூமி பூஜையினை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள், திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற உறுப்பினர் திரு.ப.குமார் அவர்கள் ஆகியோர் துவக்கி வைத்தார்கள்.

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை பேருந்து நிலையம் புதுப்பிக்கும் பணிக்கான பூமிபூஜையினை திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற உறுப்பினர் திரு.ப.குமார் அவர்கள் முன்னிலையில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் ஆகியோர் இன்று (17-9-2016) துவக்கி வைத்தார்கள்.

இந்த பேருந்து நிலையம் புதுப்பிக்கும் பணிக்கான பூமிபூஜையினை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து கூறியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.65 இலட்சம் மதிப்பீட்டில் கந்தர்வக்கோட்டை பேருந்து நிலையம் புதுப்பிக்கும் பணி துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பொதுமக்கள், பயணிகள், வணிகர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் பயன்பெறுவார்கள். மேலும் தமிழகஅரசு பொதுமக்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்தும் வகையில் தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டம், முதியோர் உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. எனவே தமிழகஅரசின் இத்தகைய நலத்திட்டங்களை பொதுமக்கள் உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என்றும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் கூறினார்.

இந்த பேருந்து நிலையம் புதுப்பிக்கும் பணிக்கான பூமிபூஜையினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்து கூறியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்து பொதுமக்களும் பயன்பெறும் வகையில் பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.65 இலட்சம் மதிப்பீட்டில் கந்தர்வக்கோட்டை பேருந்து நிலையம் புதுப்பிக்கும் பணி துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இதில் பேருந்து நிற்குமிடம், குடிநீர் வசதி, கழிவறை வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் எழிலுற பேருந்து நிலையம் புதுப்பிக்கப்படவுள்ளது. மேலும் இப்பகுதி பொதுமக்களின் கல்வியறிவை மேம்படுத்தும் வகையில் அரசினர் பல்தொழில்நுட்பக்கல்லூரி, மகளிர் கலைக்கல்லூரி போன்றவை ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே தமிழகஅரசின் இத்தகைய நலத்திட்டங்களை பொதுமக்கள் உரிய முறையில் பயன்படுத்தி வாழ்வில் முன்னேற வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.ஆறுமுகம், ஒன்றியக்குழுத்தலைவர் திரு.சின்னப்பா, ஆத்மாகுழுத்தலைவர் திரு.ரெங்கராஜ்,ஒன்றியக்குழு உறுப்பினர்கள் திரு.பாண்டியன், திரு.செங்கொடியான், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் திரு.அண்ணாத்துரை, ஊராட்சி மன்றத்தலைவர் திருமதி.கவிதாசிவா, வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.கருப்பையா, வட்டாட்சியர் திருமதி.இந்திராதேவி, உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**